**தலைப்பு 193 – தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை -2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு நோக்கெல்லை**

---

தலைப்பு 193 – தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 19 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். | 1. பெறுகை நடவடிக்கை போதியளவில் திட்டமிடப் படாமை.<br>2. பாதீடு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.3<br>2.7 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. முகாமைத்துவப் பலவீனங்கள்<br>2. மனித வள முகாமைத்து வத்தில் குறைபாடுகள் | 2.6<br>2.10 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற் கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | 1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை<br>2. வெளிநாட்டுதவி செயற்திட் டங்களின் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை | 2.1<br>2.2 |

| | | | |
|---|---|---|---|
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்த ரினாலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுகின்றன எனவும் மற்றும் தாம் அவற்றில் கையொப்ப மிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப் பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடுகள் தம்மால் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்படல். | வருடாந்த பாதீட்டு எல்லை யை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.4 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோக த்தர்களின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடு களை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.8 |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர் களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடி யால் அரசிற்கு நட்டங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரை பிரமாணங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைபிடிக்கப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்த நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிப்பதற்கும், கண்காணி க்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருப்பின் தனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பு க்களிலிருந்து கணக் கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப் பட்டதாக கருதப்படும் அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்று வதற்கும் தாம் பொறுப்பு | நட்டங்களும் சேதங்களும் | 2.5 |

வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமை பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றல்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் திகதி அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 13 பிரதான செய்பணிகள் காணப்பட்டதுடன், அமைச்சின் கீழ் நிறுவப்பட்டிருந்த 02 நியதிச் சட்ட நிறுவனங்கள், 02 திணைக்களங்கள் மற்றும் நிதியம் 01 இன் மூலம் எதிர்பாராத பெறுபேறுகள் பெற்றுக் கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

(i) கண்ணியமான பணிகள் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2017 ஆண்டிற்காக உற்பத்தித் திறன் மேம்பாட்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 01 மில்லியனுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த போதிலும் அவற்றில் ரூபா 41,115 தொகை மாத்திரம் செலவிடப்பட்டு ரூபா 958,885 இற்கான தொகை ஒன்று சேமிக்கப்பட்டிருந்தது. அவை ஏற்பாட்டுத் தொகையில் 96 சதவீதமாகும்.

(ii) கண்ணியமான பணிகள் செயற்திட்டத்தின் கீழ் சிறந்த தொழில் சூழல் ஒன்றிற்கான தேசியக் கொள்கையை செயற்படுத்துவதற்காக அமைச்சுக்கு ரூபா 3,245,000 இற்கு தேறிய ஏற்பாடு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அப்பணத்தின் மூலம் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கு ரூபா 1 மில்லியனும், தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 1 மில்லியன் தொகையும், திட்டமிடல், ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி அலுவல்களுக்கான ரூபா 1.245 மில்லியனும் ஆக ஒதுக்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை அமைச்சினால் ரூபா 558,600 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து 96 சதவீதமும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கிய பணத்தில் 100 சதவீதம், திட்டமிடல் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து 58 சதவீதமும் ஆக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

(i) அமைச்சினால் வெளியிடப்பட்ட 2014, 2015, 2016 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளில் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து தாய்மையை பாதுகாப்பு நலன் முறையொன்று ஏற்படுத்துதல், தொழில்சார் விபத்துக்கான பாதுகாப்பு முறையொன்றினை ஏற்படுத்துதல், முறையற்ற பொருளாதாரம் ஒன்று தொடர்பாக சமூக பாதுகாப்பு மேற்பரப்பு ஒன்றினை ஏற்படுத்துதல் தொடர்பாக

நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிவரை அதற்கு பொருந்தக் கூடிய சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் வெளியிடப்பட்ட 13 உடன்படிக்கைகளை வினைப்படுத்தி இலங்கைக்கு பொருந்தக் கூடிய விதமாக இலங்கையின் தொழிலாளர் சட்ட முறைமையை திருத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் 2012 ஆண்டின் போது "இலங்கையில் தொழிலாளர் நிர்வாகம் மற்றும் பரிசோதனை மீதான தேவை" (Technical Memorandum – Sri Lanka Labour Administration and Inspection Need Assessment ) என தலைப்பினைக் கொண்டு வெளியிடப்பட்ட தொழில்நுட்ப ஆவணத்தின் 2 ஆம் பிரிவின் மூலம் இலங்கையின் தொழிலாளர் நிர்வாகம் மற்றும் பரிசோதனைகளை முறைப்படுத்துவதற்காக தொழில் உத்தியோகத்தர்களின் வெளிக்கள பரிசோதனை தொடர்பாக தேசிய கொள்கையொன்று தயாரித்தல், தொழிலாளர் விசாரணைகளை திட்டமிடல் மிகவும் பரந்த அளவில் மேற்கொள்ளல் அந்த தொழிலாளர் பரிசோதனைகளின் மூலம் பெற்றிருந்த விளைவுகளை முறைப்படி ஒழுங்குபடுத்தும் வேலை திட்டம் ஒன்று தயாரித்தல், தொழில் விபத்துக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், 129 மற்றும் 150 இலக்கங்களை கொண்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கைகளை விரைவாக கையொப்பமிட்டு ஏற்றல் என்பன உட்பட 17 விதப்புரைகள் குறிப்பிடப்பட்டிருந்தது அந்த விதப்புரைகள் செயற்படுத்துவது தொடர்பாக அமைச்சின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

## 2.2 செயற்படுத்தியிருந்த வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய தொழில் பாதுகாப்பு நிறுவனம் மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து ரூபா 2.3 மில்லியன் வெளிநாட்டு உதவி செயற்திட்டமொன்று செயற்படுத்தியிருந்தது. அந்த செயற்திட்ட உடன்படிக்கையில் 3.4 பந்தியின் பிரகாரம் நிகழ்ச்சி திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தொடர்பான விபரங்கள் படிவின் D இன் மூலம் சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு அனுப்ப வேண்டியிருந்தது. நிகழ்ச்சி திட்டத்திற்காக உண்மையாக ரூபா 1,375,326 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,299,389 தொகை செலவிடப்பட்டதென சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு அறிவித்திருந்தது. உடன்படிக்கையின் 4.6 பந்தியின் பிரகாரம் ரூபா 924,063 இற்கான தொகை சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த தொகையை நிறுவனத்தின் வருமானம் என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் கீழ் செயற்படும் தொழிற்கல்வி நிறுவகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மகளிர் நிறுவனம் (UN Women) இடையே மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2016 ஏப்ரல் 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை மகளிரை சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பான ஆய்வு செயற்திட்டமொன்று செயற்படுத்த வேண்டியிருந்ததடன், அதற்காக ரூபா 1,808,282 தொகை வழங்கியிருந்தது. எனினும் செயற்திட்ட செலவில் 72 சதவீதம் பயன்படுத்தியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை ஆரம்ப ஆய்வு அலுவல்கள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. மேற்கூறிய சர்வதேச நிறுவனத்தின் நிதிப் பிரமாணங்களை கடைபிடிப்பதற்கு தொழிற்கல்வி நிறுவகத்திற்கு இயலாமல் போதல் மற்றும் நிதிப்பயன்பாட்டில் திறமையின்மை என்ற காரணத்தினால் அந்த நிறுவனத்தினால் வழங்கியிருந்த முற்பணத் தொகையில் 21 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 558,263 இற்கான தொகை அந்த நிறுவனத்தினால்

திருப்பி கேற்கப்பட்டிருந்ததுடன், 2017 செப்டம்பர் 04 திகதி அந்த பணத்தை செலுத்துவதற்கு தொழிற் கல்வி நிறுவனத்திற்கு நேரிட்டிருந்தது.

## 2.3 பெறுகை செயன்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளல்

### பெறுகைகள் திட்டமிடல்

அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயன்மறையின் மூலம் வழங்கள்கள் மற்றும் சேவைகள் நிறைவேற்றிக் கொள்வதற்காக ரூபா 35.38 இற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 18.90 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கியிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை திட்டங்கள் மீதான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,060,820 இற்கான பெறுமதிக்கு 04 டெஸ்க் டொப் கணிணிகள் மற்றும் 06 மடிக் கணிணிகள் கொல்வனவு செய்திருந்ததுடன் அதற்காக 2017 பெப்ரவரி 13 மற்றும் 2017 ஜுன் 05 திகதி ஆகிய இரண்டு சந்தர்பங்களில் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தது முதலில் தயாரிக்கப்பட்ட விவரக்குறிப்பு அமைச்சின் தேவைக்கு ஏற்ப தயாரிக்கப்படாமையால் மீண்டும் கூறுவிலை அழைப்பதற்கு நேரிட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.6 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு விவரக்குறிப்பினை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்பட்டு பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடைபெறாமையால் ஒரே பண்டத்திற்காக இரண்டு தடவைகள் கூறவிலை அழைப்பதற்கு நேரிட்டிருந்தது. மேலும் இந்த டெஸ்க் டொப் கணிணிகள் 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அமைச்சுக்கு வழங்கியிருந்த போதிலும் அவற்றிற்கு தேவையான மென்பொருட்கள் 2017 நவம்பர் 06 திகதி வழங்கியிருந்தமையால் கொல்வனவு கட்டளைகள் சமர்ப்பித்து சுமார் 04 மாதங்கள் செல்லும் வரை மென்பொருட்கள் வழங்குவதற்கான தெரிவு செய்திருந்த நிறுவனத்திற்கு இயலாமல் போனமையால் அந்த கணிணிகள் 04 மாத காலம் விளைவற்று காணப்பட்டது.

## 2.4 கடப்பாடுகளும் பொறுப்புகளும்

2017 ஏப்ரல் 27 திகதி 255/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காமல் 05 மூலதன செலவு விடயங்களில் மற்றும் 10 மீண்டுவரும் செலவு விடயங்களில் ஒதுக்கியிருந்த ரூபா 34,401,000 ஏற்பாடுகளை ரூபா 6,117,813 இனால் விஞ்சி ரூபா 16,619,144 இற்கான கடப்பாட்டினை ஏற்படுத்தியிருந்தது.

## 2.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழ் காண்பிக்கப்படுகின்றன.

(அ) அமைச்சின் 06 வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகியதால் கூட்டுத்தொகை ரூபா 403,632 இற்கான நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்டிருந்தது. இந்த நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) பிரகாரம் ஆரம்ப விசாரணை மற்றும் முழுமையான அறிக்கை 2018 அக்தோபர் 19 திகதி வரை சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) தொழில் அதிவிஷ்ட நிதியத்தின் பொது முகாமையாளரின் கடமைகளுக்காக ஒதுக்கியிருந்த அமைச்சுக்கு சொந்தமான மோட்டார் வாகனத்திற்கு 2017 ஏப்ரல் 29 திகதி நேரிட்டிருந்த விபத்து தொடர்பாக அமைசின் புத்தகங்களில் பதிவுகள் ஏதும் காணப்படவில்லை.

**2.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் நிருவாக அலுவல்களுக்கு தேவையான ஏற்பாடு உரிய முறையில் திறைசேரியில் இருந்து கிடைக்காமையால் நட்டஈடு என வைப்புச் செய்யப்பட்ட பணம் நிருவாக விடயங்களுக்காக பயன்படுத்துவதற்கு நேரிட்டிருந்தது. 1934 இன் 19 ஆம் இலக்க தொழிலாளர் நட்டஈடு கட்டளை சட்டத்தின் v ஆம் பகுதியின் 35 ஆம் பிரிவின் திருத்தமொன்றாக 1993 பெப்ரவரி 15 ஆம் திகதி 754/3 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளரின் கைவசம் காணப்படும் நட்டஈட்டுத் தொகை விபத்துக்குள்ளாகிய தொழிலாளரினை தங்கி வாழ்வோருக்கு நலன் ஒன்று கிடைக்கும் விதத்தில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது. நட்டஈடு என தொழில் வழங்குனர்களினால் வைப்புச் செய்திருந்த ரூபா 23,092,217 இற்கான தொகை வருட இறுதி அளவில் நிறுவனத்தின் செலவுக்காக பயன்படுத்தியிருந்ததுடன் அந்த நட்டஈட்டு தொகை வங்கி கணக்கு ஒன்றில் வைப்புச் செய்திருந்தமையால் நலன்பெறுவோருக்கு கிடைக்கவேண்டியிருந்த வட்டி வருமானத்தை இழந்துள்ளது. நட்டஈடு தொகை நிறுவனத்தின் செலவுக்காக பயன்படுத்தியமையால் குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு நட்டஈடு செலுத்துவதில் தாமதம் காணப்பட்டதுடன் நட்டஈடு செலுத்துவதற்காக அமைச்சிடம் பணம் விண்ணப்பித்து நட்டஈடு செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) 2005 இன் 10 ஆம் இலக்க தொழிலாளர் நட்டஈட்டு திருத்த சட்டத்தின் iv ஆம் பகுதியில் 13(1) பிரிவின் பிரகாரம் நட்டஈட்டு ஆணையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட நட்டஈட்டுத் தொகை ஒன்று அதற்காக உரிமை இருக்கும் ஆட்களுக்கு (சாட்சிகளை அழைத்து விசாரணை செய்வதன் மூலம், பின்னர் கட்டளைகள் அல்லது வழக்கு தீர்ப்பு ஒன்றின் மூலம் தீர்மானிக்கப்பட்ட) பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் ரூபா 7,758,225 இற்கான நட்டஈட்டு தொகையொன்று உரிய நலன்பெறுவோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நலன்பெறுவோருக்கு நட்டஈட்டுத்தொகை கிடைப்பதற்காக நீண்ட காலம் கடந்துள்ளமையால் அவர்களுக்கு கிடைக்கும் பணத்தின் தற்போதைய பெறுமதி வீழ்ச்சியடைவதுடன் நட்டஈடு என உரித்தாகும் உச்ச தொகை ரூபா 550,000 என வரையறுக்கப்பட்டுள்ளமையால் அவர் மேற்கொள்ளும் பிரயாணச் செலவு சட்டவரைஞர் கட்டணம் மற்றும் அதனொடு தொடர்புடைய ஏனைய செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது நலன்பெறுவோருக்கு ஆறுதல் அளிக்கும் நிலைமையொன்று கிடைக்காமை அவதானிக்கப்பட்டது. நட்டஈட்டுத் தொகை விடுவிக்கும் காலதாமதம் 1 வருடம் முதல் 05 வருடங்களை விட மிகையான காலவரையறை வீச்சில் காணப்பட்டது.

(இ) தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சின் கீழ் செயற்படும் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் பராயமடையாதவர்கள் தொடர்பாக தகவல்களை நாளதுவரை பேணப்படுவதற்கான நடைமுறை ஒன்று காணப்படாமையால் குறிப்பிட்ட பராயமடையாதவர்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்கள் உரிய கால வரையறையில் அவர்களுக்கு கிடைக்காமையால் தொழிலாளர் நட்டஈட்டு கட்டளை சட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாத சந்தர்பங்கள் காணப்பட்டன. உரிய வயதை

அடைதல் மற்றும் வதிவிடம் பற்றிய உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் ஏதும் காணப்படாமை ஆகிய காரணங்களினால் ரூபா 845,656 நட்டஈட்டுத் தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்த 44 கணக்குகள் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் காணப்பட்டது.

(ஈ) 1934 இன் 19 ஆம் இலக்க தொழிலாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பகுதியில் 41(2) பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஊழியர் ஒருவருக்கு ஏற்படும் விபத்து ஒன்றின் போது தொழில் வழங்குனர்கள் நட்டஈடு செலுத்துவதை புறக்கணித்த சந்தர்ப்பங்களில் அவர்களின் அசையாத மற்றும் அசையும் சொத்துக்களை தடை செய்து அவற்றை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்து நட்டஈட்டு தொகையை அறவீடு செய்து கொடுப்பதற்கு முடியும். அந்த நட்டஈட்டு தொகையினை அறவீடு செய்வதற்கான பிடியாணை வழங்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை உரிய முறையில் செயற்படுத்தப்படாமையால் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு ரூபா 11,918,793 இற்கான நட்டஈட்டு பெறுமதியினை கொண்ட 47 வழக்கு கோவைகள் காணப்பட்டன . அந்த நலன்பெறுவோருக்கு நட்டஈட்டுத் தொகை கிடைக்காத கால தாமதம் 03 வருடங்கள் முதல் 22 வருடங்கள் வரை இருந்தது. இதன் காரணமாக நட்டுஈட்டு கிடைக்க வேண்டிய தங்கி வாழ்வோருக்கு நலன்கள் உரிய முறையில் கிடைக்கப்படாமை ஒன்று நடைபெறுகின்றது என அவதானிக்கப்பட்டது.

(உ) தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது நடைபெற்றுள்ள பயங்கர விபத்து காரணத்தினால் இறந்துள்ள ஊழியர்களின் பராயமடையாதோருக்கு கிடைக்கும் நட்டஈட்டுகத் தொகைக்காக நிலையான வைப்புக்களில் பணம் வைப்புச் செய்தல் மற்றும் உரிய பராயமடைந்தவுடன் நலன்களை வழங்குதல் ஆகிய கருமங்கள் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. பராயமடைந்தும் நலன்களை விடுவிக்காத 329 கணக்குகள் காணப்பட்டதுடன் அந்த நட்டஈட்டு தொகையின் பெறுமதி ரூபா 10,484,809 ஆகும். அதேபோல் அந்த நட்டஈட்டுத் தொகையை விடுவிக்கும் காலதாமதம் 1 வருடம் முதல் 25 வரை வீச்சில் காணப்பட்டது.

## 2.7 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | % |
| 2013 | மீண்டுவரும் | 166.9 | 152 | 14.9 | 8.9 |
| | மூலதன | 62.7 | 51.2 | 11.5 | 18.3 |
| | **மொத்தம்** | **229.6** | **203.2** | **26.4** | **11.5** |
| 2014 | மீண்டுவரும் | 183 | 171.9 | 11.1 | 6.0 |
| | மூலதன | 81.8 | 73.8 | 8 | 9.7 |
| | **மொத்தம்** | **264.8** | **245.7** | **19.1** | **7.2** |
| 2015 | மீண்டுவரும் | 215.6 | 202.6 | 12.9 | 5.9 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதன | 45.2 | 34.4 | 10.8 | 23.8 |
| | **மொத்தம்** | **260.8** | **237** | **23.7** | **9.1** |
| 2016 | மீண்டுவரும் | 243.6 | 233.8 | 9.8 | 4.0 |
| | மூலதன | 51.9 | 50.2 | 1.7 | 3.2 |
| | **மொத்தம்** | **295.5** | **284** | **11.5** | **3.9** |
| 2017 | மீண்டுவரும் | 235.2 | 222.6 | 12.5 | 5.3 |
| | மூலதன | 56.2 | 34.7 | 21.6 | 38.4 |
| | **மொத்தம்** | **291.4** | **257.3** | **34.1** | **11.7** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரித்திருக்காமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு எதிர்பார்த்த செலவுகள் ஏற்படாமை ஆகிய காரணத்தினால் தேறிய ஏற்பாடுகளில் ரூபா 6,045,387 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 17 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 12.4 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாடுகளில் எதுவும் பயன்படுத்தப்படாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 43 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 31,604,234 இற்கான மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் அந்த செலவு விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 23,137,466 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்பு, ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சு ஒன்றின் அளவினை கொண்டிருந்தது.

## 2.8 அரச ஊழியர்கள் முற்பணக் கணக்கு

அமைச்சுக்குரிய 19301 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 8.5 | 8.4 | 3.9 | 3.9 | 26 | 15.8 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 290,715 தொகையாக

காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதி 4 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான கால வீச்சு முதல் காணப்பட்டிருந்தது.

## 2.9 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண கோவையின் நிதிப் பிரமாணம் 1640(iv) இன் பிரகாரம் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனமொன்றிற்காக தனிப்பட்ட பிரயாணங்களுக்காக அறவிட வேண்டிய கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான மற்றும் வெற்றிட மற்றும் பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான அமைச்சினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 96.06 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 12 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 77 | 53 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 37 | 28 | 09 |
| (v) | அமைய/ஒப்பந்த | 01 | 01 | - |
| (vi) | அமைச்சரின் பதவியணி | 15 | 15 | - |
| | | 153 | 112 | 41 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு தொழில் அமைச்சில் கடமையாற்றும் இணைந்த சேவையை சேர்ந்த 8 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெறாமல் இருந்ததுடன் அவர்களின் சேவைக்காலம் 05 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரை வீச்சில் காணப்பட்டது.

(ஆ) அமைச்சின் மொத்த ஊழிய உத்தியோத்தர்களிடம் 08 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு குறைவாக பயிற்றப்பட்ட 24 உத்தியோகத்தர் காணப்பட்டதுடன் எதுவித பயிற்சியும் வழங்கப்படாத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 50 ஆகும்.